ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

வித்தியாதிக்கியத்தாலும், விநயாதிசயத்தாலும், விசிஷ்டதர்மாசரணத்தினாலும், நம் பூர்வீகர்கள் பிரசித்தியையும், பெருமையையும் பெற்றார்கள். தற்காலத்தியவர்களுக்கோ அதிக வித்தியையை அடைய வேண்டிய அவாவும், அவகாசமுமில்லை. வித்யை யில்லாதவிடத்தில் விநயமுண்டாவதில்லை விநயமில்லாவிடில் எவரையும் பெரியவராகநினைக்க அந்தக்கரண மிடங்கொடுக்காது. அப்பொழுது பெரியோர்களுடைய ஸஹவாஸம் நேரப்போவதில்லை. அதில்லாவிடில் நல்லது கெட்டது விளங்காது. அப்படியிருக்கையில் விசிஷ்டதர்மாசரணம் ஸம்பவிக்க இடமில்லை. ஆகவே வித்தியாதிகளாலாகிய பிரசித்தியும், பெருமையுமுண்டாவதற்கிடமில்லை. ஆனால் அதில் தற்காலத்தியவர்களுக்கு ஆசையில்லாமலில்லை. பிரசித்தியடைவதிலும், பெருமை பெறுவதிலும் ஆசையிருந்தும் அதன் ஸாதனமாகிய வித்தியை முதலியவற்றில் இவர்கள் பிரவிருத்திப்பதில்லை. வித்தியை, விநயம், முதலிய உத்தமகுண ஸம்பன்னர்களைத் தூஷித்து விடுவதாலேயே பிரசித்தி யடைந்துவிடலாமென்று நினைத்து விடுகிறார்கள். அதனால் கஷ்டப்பட்டுக் கல்விகற்க முயலுவது மூடத்தனமென்றே நினைக்கிறார்கள். இந்த இரஹஸ்யம், கம்பர் காளிதாஸர், பவபூதி பாணன்முதலிய முன்னோர்களுக்குத் தெரியவில்லைபோலும் அவர்கள் கியாதியை யடைவதற்குக் கஷ்டப்பட்டாவது கல்விகற்பதே காரணமென்று கருதினார்களே யன்றி கண்யப்பட்டவர்களைக் கண்டபடி தூஷித்தே கியாதி பெறலாமெனக் கருதவில்லை. தற்காலத்தியவர்களுக்கு இந்தக்குருக்குவழியைக் காட்டியவர் எவரோ? தெரியவில்லை. முன்னோர்கள் எந்த காரியத்தைச் செய்தாலும், எந்தக் கிரந்தத்தை யெழுதினாலும் தமக்கு முந்தியுள்ளவர்களை வணங்கித் துதித்து அவர்கள் சென்றவழியிலேயே தாங்களும் செல்லுவதற்காகப் பிரதிக்ஞைசெய்து அதற்கனுகுணமாகவே மூலக்கிரந்தத்தையோ, வியாக்கியானத்தையோ, செய்வார்கள். தற்காலத்தியவர்கள் போல் வித்யாரண்யர் வித்துவானல்ல வேதவியாஸர் வீண் பிரயாஸப்பட்டவர் என்பதாதியான, கனவிலும் நினைக்க வொண்ணாத கடுஞ்சொற்களைக் கூச்சமற்றுக் கூறிவிடத் துணியமாட்டார்கள், இத்தகைய கொடிய செயலுக்குக் காரணமான அக்ஞானம் சிறந்த கல்விமான்களெனக் கியாதியடைந்த கவிமணிகளிடமிருக்க மாட்டாதாகையால் அவர்கள் கர்வப்பட்டுக் கடுஞ்சொற்களை கிரந்த மூலமாகக் கிளப்பிவிடத் துணியமாட்டார்களென்பது உசிதமே. இவர்களுக்கோ எல்லாத்துணிச்சலுக்கும் பின் பலமாகப் பெரியதோர் அக்ஞான மிருந்துவருவதால் எதற்கு மஞ்சாமல் தர்மசாஸ்திர வழியைத் தடைசெய்யவும் வேதப்பிரமாணத்தை வீணென்றுரைத்திடவும் பிராசீன ஆசாரத்தைப் பாழாக்கிவிடவும் புதியவழியைப் புகட்டிவிடவும் அதிகப் பிரயாஸ மெடுத்துக் கொள்ளவேண்டியதாய் வருகிறதில்லை. தர்ம்யவிவாஹத் தடைசெய்பவர்களும். ஸமுத்திர யானத்தை ஸாதுவெனப் பகர்வர்களும் வர்ணாசிரம விபாகத்தை விரட்ட முயன்றவர்களுமிடைக்கிடையே இவர்களுக்கு ஸாதகமாய்ச் சேருகிறார்களல்லவா! இப்படி சாஸ்திர விபரீதவழியிலீடுபட்டு பாபத்திற்காளாகாமல் எல்லோரும் நல்வழிநாடி நன்மை யடைவார்களாக, சுபம், (ப—ர்.)

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ புரட்டாசி௴ ௮௨

# தன்னையறியாதவனுண்டோ?

இந்தக்கேழ்விகேட்டால்— "தன்னையறியாதவன் தாணியில் உண்டா? எல்லோரும் தன்னைத்தெரிந்துகொண்டுதானிருப்பான்" என்று ஸாமான்யமாய்ச் சொல்லிவிடுவார்கள். விசேஷித்துக் கேட்டால்—"நான் இந்தஜாதியான்- இந்தநிறமுள்ளவன்- இந்தத் தொழில் செய்பவன்- இந்த மனிதனைச் சேர்ந்தவன்,, என்று சரீரத்தின் ஜாதி - குணம் - கிரியை - ஸம்பந்தம் முதலியவைகளை தன்னுடையதாகக் குறிப்பிடுவதால் சரீரமே நானென மாரைத் தட்டிக்காட்டுவார்கள். சரீராதிகளைவிட நான் வேறுபட்டவன் என்று உணரமாட்டார்கள். உண்மையில் சரீராதிகளைவிட வேறு பட்டவனாயினும் அப்படித் தெரிந்து கொள்ள வொட்டாமல் சரீராதிவடிவமாயிருப்பவனாகப் பிரமிக்கும்படி அநாதி அக்ஞானம் செய்துவிட்டது. அதனால் சுயம் சச்சிதானந்த வடிவப்ரம்மஸ்வ ரூபனாயினும் அக்ஞானத்தாலாகிய சரீராதிசப்பந்தத்தால் தன்னை மறந்து சரீராதிகளைவிட வேறாகத்தானொருவன் இருப்பதாகப் பெரும்பாலும் பிராணிகளுக்குத் தோன்றுவதில்லை. அக்ஞான ஸம்பந்தமுள்ளவரையில் ஒன்றோடொன்றாய்க் கலந்த ஆத்துமா னாத்துமாக்களின் வேற்றுமை அறியப்படுவதில்லை. பாலையும் ஜலத்தையும் கலந்துவிட்டால் அதில் இவ்வளவு அம்சம் பால் என்றும் இவ்வளவு அம்சம் ஜலமென்றும் எளிதிலறிய முடியா தன்றோ! ஒரு இரும்புத்துண்டை நெருப்பில் பழுக்கப் பழுக்கக் காய்ச்சினால் ஒன்றோடொன்று கலந்தநெருப்பு இரும்புத்துண்டு இவைகளுள் நெருப்பின் தர்மங்களாகியபிரகாசம் சுடுகை முத லியன இரும்பிலும் இரும்பின் தர்மங்களாகிய கடினத்தன்மை நீண்ட உருவம் முதலியன நெருப்பிலும் தோன்றி ,,இஃதோர் வஸ்து சூடுள்ளதும், நீண்டதும், கடினமானதுமாகப் பிரகாசிக்

இன்றது,, என்று பிராந்தியுண்டாவதுபோல் ஆத்தும தர்மங்களாகிய சச்சிதானந்தாம்சங்கள் சரீராதிகளிலும், சரீராதி தர்மங்களாகிய கருப்பு சிகப்பு நெட்டை குட்டைமுதலியன ஆத்மாவிலும் தோன்றி ,,ஓரேவஸ்து சரீராதிவடிவமாய் பரிணமித்து சேதனமாயும் சுகதுக்காதிகள் சேர்ந்து கலங்கினதாயுமிருக்கிறது, என்று பிரமம் உண்டாகிறது. உண்மையில் இந்தக் கூட்டத்தில் அசேதனாம்சம் பரிணமிக்கிறது. சேதனும்சம் அதை அனுஸரிக்கின்றது. அசேதனும்சம் எங்கெந்தவடிவமாய்ப் பரிணமிக்கின்றதோ, அந்தந்த ரூபமாய் சேதனும்சமும் பிரமிக்கப்படுகிறது. அந்தந்த பரிணுமகாலத்திலும் சேதனும்சம் கூடவே இருக்கின்றது. எப்படியெனில் இதற்கு ஒரு உதாரணமுண்டு. அதாவது— பால் சிலகாலம் பாலவஸ்தையுள்ளதாயும், சிலகாலம் அவ்வவஸ்தைமாறி தயிர் அவஸ்தையுள்ளதாயுமாகிறதல்லவா. அதில் பாலவஸ்தையாயிருந்தபொழுது உள்ளிருந்த நெய்அம்சம் தயிரவஸ்தையிலும் தொடர்ந்திருக்கின்றது. அதுபோலவே பிரகிருதிபாகம் எங்கெந்த ரூபமாகப் பரிணமித்தாலும் சேதனும்சம் அதில்தொடர்ந்தே இருக்கின்றது. ஆகவே பிரகிருதி என்னும் மாயை- மகத்தத்துவம்- அஹங்காரம்- பஞ்சபூதங்கள் என்பதாதியாகப் பரிணமிக்கும்பொழுது ஒவ்வொரு அவஸ்தையிலும் தொடர்ந்துவருகின்ற சேதனும்சம் சரீரவடிவமான பரிணுமத்திலும் தொடர்ந்துநிற்கிறது. பாலுக்குள்ளும் தயிருக்குள்ளும் சூக்ஷ்மமாய் வியாபித்துநிற்கும் நெய் ஸ்தூலதிருஷ்டிகளுக்குத் தெரியாமல் கேவலம் பால் தயிற் என்றே வியவஹரிக்கப்படுவதுபோல் எவ்வவஸ்தையிலும் தொடர்ந்து உள்ளே சுயஞ்சோதிச் சுடராய் விளங்கும் சேதனவஸ்து பிராந்தியுள்ள பாமரர்களுக்குத் தோன்றுமல்பெருத்தும் இளைத்தும் கருத்தும் சிவந்துமிருப்பவன் நான்,, என்று சரீரமே வியவஹரிக்கப்படுகிறது. இந்த நிலைமையில் நிற்பவனுக்கு ஆத்துமலாபம் அபேக்ஷிக்கக்கூடியதாகிறது தாழ்ந்த ஜாதியாரால் பால்யம்முதல் வளர்க்கப்பட்டு, அந்த ஜாதியாகவே தன்னை நினைத்துக்கொண்ட ராஜகுமாரனுக்கு அவனது உண்மைசொரூபத்தை அன்னைபோதிக்கத் தான்க்ஷத்திரிய வீரனென்று அவன் தெரிந்துகொண்டு போர்புரிந்து சகல ராஜ்யத்தையுமடைந்து சக்கிரவர்த்தியாய் மகிழ்வதுபோலாமிது. எப்படியெனில்—

ஒரு சக்கிரவர்த்தி வேட்டையாடக் கானகம்வந்து அந்த விடம் ரமணீயமாயிருப்பதுகண்டு அந்தப்புரத்தோடு சிறிது ஆங்கு வஸிக்க, காட்டிலுள்ள வேடர்கள் வெளியில் உலாவவந்த அவனைக்கொன்று, சமீபத்தில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையான ராஜகுமாரனை அன்னையுமறியாதபடி அபஹரித்து வெகு தூரம் கொண்டுவந்து தன் குழந்தைகளோடு வளர்த்துவந்தார்கள். அந்தப்பழக்கத்தால் ராஜகுமாரன் தன்னை க்ஷத்திரியனென்றுணராமல் தானுமொரு வேடனென்றே நினைத்துக் கொண்டு அந்த ஜாதிக்குரிய தொழிலைப் பயின்றுவருங்காளில், குழந்தையைக்காணுமல் வருஷக்கணக்காய்த்தேடி தெய்வச் செயலால்—அம்பெய்து பரவைகளை அடித்துக்கொண்டிருக்கும் அருமைப் புதல்வனைக்கண்டு ஆவலுடன்வந்து கட்டியணைத்து, முத்தமிட்டு, இனியமொழிகளால் கொஞ்சிக்குலாவி, அவனது நிஜஸ்வரூபத்தை போதிக்க அவன் உண்மையுணர்ந்து தனது உண்மையான சொரூபத்திற்குரிய தொழில்புரிவானுய் அகண்ட பூமண்டலத்தையும் ஜயித்து ஸாம்ராஜ்ய பதவியையடைந்து போனந்தம்பெற்று விளங்கினுன், இந்த உதாஹரணம்போல்—வேசி போலொத்த ப்ரக்ருதியென்னும் மாயையால் மஹதாதிகளின் கூட்டத்தில்கொண்டு விடப்பட்டு சரீரேந்திரியாதி ஸங்காத (கூட்ட)த்தையே தானென நினைத்துக்கொண்டு அதற்குரிய வேலையைச்செய்து, அதன்பயனுக விஷயபோகங்களை அனுபவித்துத் தாபத்திரயத்தால் வாடிநிற்கும் ஜீவனைப்பார்த்து கருணையுடன் உபநிஷத்தென்னும் தாயார் அவனது நிஜஸ்வரூபத்தை போதிக்கும்போது உண்மையறிந்து பிராந்தியால் கற்பித்துக் கொண்டதை விட்டொழித்து சச்சிதானந்த வடிவ ப்ரம்ம ஸ்வரூபமாய் விளங்குவான். நான் என்பதின் உண்மை ஸ்வரூபம் அதுவே. இதை ஸூக்ஷ்மதரிசிகளான விவேகிகள் தெரிந்துகொண்டிருக்கிறுர்கள். அங்ஙனமே—

नीचानां वसतौ तदीयतनयैः सार्धं चिरं वर्धित
स्तज्जातीय मवैति राजतनयः स्वात्मानमप्यञ्जसा ।
संघाते महदादिभिस्सह वसंस्तद्वत् परः पूरुषः
स्वात्मानं सुखदुःखमोहकलिलं मिथ्यैव धिङ्मन्यते ॥

दाता भोगपरः समप्रविभक्तो यः शासिता दुष्कृतां
राजा स त्वमसीति मातृमुखतः श्रुत्वा यथावत् स तु ।
राजीभूय जयार्थमेव यतते तद्वत्पुमान् बोधितः
श्रुत्या तत्वमसीत्यपास्य दुरितं ब्रह्मैव संपद्यते ॥

“நீசர்களது வாஸஸ்தானத்தில் அவர்களது குழந்தைகளோடு நீண்டநாளாய் வளர்க்கப்பட்டுவந்த ராஜகுமாரன் தன்னை அந்த ஜாதியுடையவனுக நினைத்திடுவான், அதுபோல் சரீரேந்திரியாதி ஸங்காதத்தில் மஹதாதிகளோடு வஸிக்கும் ஆத்துமா தன்னை சுகதுக்க மோஹாதிகளால் கலக்கமுற்றதாகப் பிராந்தியால் நினைப்பான்.—

அந்த ராஜகுமாரனுக்குத் தாயார் சமீபத்தில்வந்து—“என் அப்பனே! அண்டினவர்க்கனைத்தையும் அளிப்பவனும், ஸகல ஸாம்ராச்ய போகங்களில் சுகித்திருப்பவனும், ஸகல ஐசுவரிய ஸம்பன்னனும், துஷ்டர்களை சிக்ஷிப்பவனுமான யாதொரு அரச னுண்டோ அவனல்லவா-நீ” என்று போதிக்கவே தாயார் மூல மாக அந்த ராஜகுமாரன் உண்மையான தன்சொருபத்தையறிந்து க்ஷத்திரியனுகத்தன்னை உண்மையிலறிந்து நீசத்தன்மையைவிட்டு அரசனுகி ஜயித்து ஆனந்தமாய் விளங்குவதுபோல் இந்த ஜீவாத் துமாவும்—“ஸச்சிதானந்த வடிவமான யாதொரு ப்ரம்மஸ்வரூப முண்டோ! அதுதான்நீ” என்று அன்னைபோன்ற உபநிஷத்தால் போதிக்கப்படவே உண்மையை உணர்ந்து அனுத்துமாவைவிலக்கி பரமானந்தவடிவமாய் விளங்குவான்” என்று பெரியோர்களால் கூறப்படுகின்றது. இவ்வுண்மையை அறிந்து யாவரும் தன் சொரூபத்தை அறிந்து சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

தஞ்சை பிராமணர் ஸநாதனதர்ம ஸம்ரக்ஷணஸபை.

இதுவே சமயம்!

# சாரதாச் சட்டத்தைக் கண்டியுங்கள்.

தூங்குகிறீர்கள்! தூங்காதீர்கள்!!

நாளது செப்டம்பர்-மீ 8உ சாரதாச்சட்ட ரத்து மசோதாக்களும் திருத்து மசோதாக்களும் மொத்தம் எட்டு மசோதாக்கள் டில்லி சட்டசபையில் வருகின்றன.

இந்தசமயம் தப்பினால் மறுசமயம் வாராது. இன்றைக்கே அடியில்கண்ட தீர்மானம்செய்து செலவையும் சிரமத்தையும் கவனியாமல் வைசிராய் (To the Private Secretary to His Excellency , the Viceroy Simla)க்கு தந்தி அடியுங்கள். உடனே அந்த தீர்மானத்தை டைப் (Type) செய்தோ நன்றாய் எழுதியோ பல பிரதிகள் செய்து ஒரு நிமிஷங்கூட தாமதியாமல்

ஒன்றை – To The Private Secretary, to His Excellency the Viceroy, Simla விலாஸத்துக்கும்,

ஒன்றை – To The President, Legislative Assembly, Simla விலாஸத்துக்கும்

ஒன்றை – To Raja Bahadur G. Krishnamacharyar Avl., M. L. A. Simla விலாஸத்துக்கும் அனுப்புங்கள்.

அதிக பிரதிகள் இருந்தால் நியூஸ்பேபர்களுக்கு அனுப்புங்கள்.

டைப் செய்தனுப்பவேண்டிய தீர்மான விவரம்.

Resolution passed by Orthodox public of.................. ........................ (இங்கே ஊர் பெயர் போடவும்)

"We again condemn the Sarada Act and support the bills of Mr. Raja Bahadur G. Krishnamacharyar and other members of the Assembly to repeal the Sarada Act in toto as marriage is a compulsory religious sacrament with us and pray restore confidence in us, reassuring religious neutrality on the part of the Government."

President.

தந்திக்கு இவ்வளவு போதும்.

Orthodox public of                pray support repeal of Sarada Act.

President.

வைஸ்ராய்க்கு அனுப்பும் லெட்டர் விவரம்.

..............................

From.............................................. —9—1931

To The Private Secretary to
His Excellency the Viceroy of India, Simla.

Sir.

In enclosing a copy of the resolution passed by the orthodox public of the Village of
I respectfully request the same may be placed before His Excellency for favourable consideration.

I beg to remain,
sir,
Your most obedient servant,

PRESIDENT.

---

# வேதலக்ஷண பண்டிதர்களுக்கு விக்ஞாபனம்.

---

## முகவுரை.

ஸர்வேச்வரனான பகவான் தனது லீலாமஹிமையால் ஸகல உலகங்களையும் சிருஷ்டித்து அந்த உலகங்களை அனுபவிக்க ஜீவராசிகளையும் சிருஷ்டித்து அந்த ஜீவராசிகள் தர்மத்தால் ஸுகமும் அதர்மத்தால் துக்கமும் அடைவார்களென ஸங்கல்ப்பித்து அவ்விதமான தர்மாதர்மங்களை ஜீவராசிகள் அறிவதற்கு வேதங்களை வெளியிட்டு அவ்வேதங்களையும் முதலில் தானே பிரம்ம

தேவனுக்கு அத்யயநம் செய்வித்தார். அந்தப் பிரம்மதேவன் மரீசி, மனு முதலிய மஹர்ஷிகளுக்கும், அம்மஹர்ஷிகள் தனது கோத்திரங்களில் பிறந்த த்விஜர்களுக்கும் அத்யயநம் செய்வித்தார்கள். அன்றுதொட்டு இன்றுவரை த்விஜகுலங்களில் வேதங்கள் விசதமாய் விளங்கிவருகின்றன.

ஈச்வரனது ஆஞ்ஞாரூபமான வேதமஹிமையால் ஜீவர்களின் க்ஷேமார்த்தமாக காற்று வீசுகிறது. ஸூர்யனும் சந்திரனும் பிரகாசிக்கிறார்கள். அக்னி உஷ்ண சக்தியைத்தருகிறது, இந்திராதி ஸகல தேவர்களும் மழை முதலான ஸௌகர்யங்களையும் செய்துவருகிறார்கள்.

இவ்விதம் உலகம் நடைபெறுவதற்குரிய மஹிமைவாய்ந்த வேதங்களை இவ்வுலகத்தில் பிறந்த அதற்குறிய ஸம்ஸ்காரங்களால் சுத்திபெற்ற ஒவ்வொரு விப்ரகுல மனுஷ்யனும் அவச்யம் கற்கவேண்டும். அவ்விதம் கற்காவிட்டால் இவ்வுலக நன்மைகளை அடையாததோடில்லாமல் ரிஷிகள், தேவர்கள், பிதுர்கள் இவர்களுக்குக் கடனாளியாகிறான். இக்கருத்தை ச்ருதியும் உத்கோஷிக்கிறது. அவ்விதம் கடனாளியாகாவண்ணம் வேதாத்யயநம் அவசியம் செய்யத்தக்கது.

இவ்விதமிருக்க, இக்காலத்தவரோ தனது தேசம், மதம், பாஷை, இவைகளை மறந்து, பரதேசம்— பரமதம்—பரபாஷை இவைகளில் மோஹங்கொண்டு தமது தனயர்களை அதில் பிரவேசிக்கச்செய்வதால் ஒரு குழந்தையானது தனது தாயின் ஸ்தன்ய பானம் செய்யாது பிறருடைய உணவுகளை உண்பதால் எவ்விதம் பலமின்மை, ரோகம், ஆயுள்குறைவு இவைகளை அடையுமோ அதுபோலவே மாத்ரு பாஷையைவிட்ட மனிதர்களும் தற்காலத்தில் ஜீவநத்திற்கு மயங்குகிறார்கள்.

ஆனாலும் அனேக தீரபுருஷர்கள் இக்காலத்திலும் வேத வேதாங்கங்களைக்கைவிடாது கற்றுக்கொண்டு ஜீவனமும் செய்து வருவதோடு ஸர்வேச்வரன் ஆஞ்ஞாரூபமான வேதங்களைப் பின்பற்றுதலால் இன்றைக்கும் வஸந்தம், வர்ஷா, சரத், ஹேமந்தம், என்னும் ருதுக்களில் வெய்யில், மழை, நிலவு, பனி முதலியதுகளால் பயிர்கள் விருத்தியடைய, பல பிராணிகள் பசியை

அடக்கி வாழ்ந்து வருகிறார்கள். அல்லாது இவைகள் தற்காலத்திய நவீன நாகரீக புத்திசாலிகளின் திருத்தத்தாலல்ல, ஆனால் கடவுளின் கட்டளையாலென்றறிக.

ஆனால் கீழ்ச்சொன்னபடி வேதம் வேதாங்கம் இவைகளை ஒருவனே முற்றிலுமறிய இக்காலத்தில் ஒருவராலும் பெரும்பாலும் முடியாது. அதற்குக் காரணம் தவக்குறைவே. சிலர்களே வேதம், முக்யமான மீமாம்ஸை வ்யாகரணம்இவைகளில் மிதமாக பரிச்ரமப்படுகிறார்கள். ஆனாலும்

नानाम्नाय परिश्रमं कलयतां नास्त्येव शास्त्रेषु धीः ।

என்ற நியாயப்படி வேதமிருந்தால் சாஸ்திரமில்லை, சாஸ்திரமிருந்தால் வேதமில்லை. இரண்டுமிருந்தால் ஸாஹித்யமில்லை. மூன்றுமிருந்தால் விநயமில்லாமல் வேதம் வேதபாஷ்யங்கள் இவைகளில் அவஞ்ஞையுண்டாகிறது.

वेदव्यासस्स इह दश यो वेद वेदाक्षराणि ॥

என்ற ந்யாயப்படி வேதத்தில் பத்து அக்ஷரங்களை தானறிந்தால் தன்னை வேதவியாஸராக நினைத்து முன் வேதவியாஸரை சண்டைக்கி அழைக்கிறார்கள். இது கலிவலிமையென்று ஸாதுக்கள் அடங்கி இக்காலத்தில் வேதமென்ற எழுத்தை உச்சரிப்பவர்களே வேதவ்யாஸராகக்கூறலாமென்று ஒதுங்குகிறார்கள்.

ஆனாலும் தற்காலத்தில் கிருஷ்ணயஜுர்வேதத்திற்கு (101) சாகைகளிருப்பினும் தைத்திரீயமென்ற ஓர் சாகைதான் விளங்கி வருகிறது. அதற்கு லக்ஷணக் கிரந்தங்கள், பிராதிசாக்யம், வியாஸசிக்ஷை, ஸப்தலக்ஷணம், ஷட்விம்சதி ஸூத்ரம் எனப்பெயருடன் விளங்குகின்றன, முதல் இரண்டு கிரந்தங்களின் கர்த்தாக்கள் முறையே காத்திகேயர்-வியாஸர் என அறியப்படுகிறது.பின் 2 கிரந்தங்களில் சமானத்திற்கும்ஷட்விம்சதிஸூத்திரத்திற்கும்கர்த்தாக்கள் அறியப்படாவிடினும் ஆர்ஷக்கிரந்தங்கள்போலவே அதிகரிக்கப்படுகின்றன. இவ்விதம் ஸப்தலக்ஷண விலங்கியாதிகளுக்குமூலமானப்ராசின விலங்கியாதிகளுமிருக்கின்றன. இந்தநான்குக் கிரந்தங்களும் வேதம்தோன்றியகாலம் முதல் நாளதுவரை உலகத்தில் ஸகல பண்டிதர்களால் படிக்கப்பெற்றும் அதுபற்றியே ராஜகிருஹங்களில் பரீக்ஷார்த்தங்களாகவும் கொண்டாடப்பெற்றும் பல

ப்ராசீன நவீன பண்டிதர்களால் அந்தக்கிரந்தங்களுக்கு வியாக்யானம் செய்யப்பெற்று மீமாஸ்ஸாவ்யாகரணம்போலவே தக்கதோர் சாஸ்திரமாக ஆதரிக்கப்பெற்று வருகின்றன.

இவ்வாறிருக்க தற்பொழுது (ஷை வேதலக்ஷணக் கிரந்தங்கள் அவ்யுத்பன்னர்களுக்கேற்பட்டவை. வ்யுத்பன்னர்களான அபிஞ்ஜர்களுக்கு திருப்திகரமானவையல்ல. அவ்விதமான ஒரு லக்ஷண நூல் நம்மால் எழுதப்பட்டிருக்கிறது) என்றும் இதைப் பெரியோர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? அல்லவாவென்றும் குணதோஷங்களை எடுத்துக்காட்டினால் அவர்களிடத்தில் கிருதஞ்ஞர்களாகவிருப்போமென்றும் முகவுரையுடன் கூடிய ஓர் நவீன லக்ஷணக் கிரந்தம் வேதாத்யயந ஸர்வஸ்வம் என்ற பெயருடன் வெளியாயிருக்கிறது.

ஷை புஸ்தகம் நமக்கு கும்பகோணம் வேதலக்ஷணஸம்ரக்ஷண ஸபையோர்களால் குணதோஷ விமர்சனம்செய்ய அனுப்பப்பெற்று அதுபோலவே நாம் ஷை கிரந்தத்தை பரிசீலனம் செய்ததில் அதைப்பற்றி ஒவ்வொரு பிரகரணமாக உபன்யஸிக்க வேண்டியவை அதிகமாக இருப்பதால் ஷை விஷயங்களை ஓர் புஸ்தகரூபமாகவே எழுதவேணுமென்ற ஆவல் நமக்குண்டானமையாலும், அதுபோலவே கும்பகோணம் வேதலக்ஷண ஸம்ரக்ஷண ஸபையோர்கள் நமக்கு ஆஞ்ஞாபித்தமையாலும், ஷை வேதாத்யயன ஸர்வஸ்வமென்னும் கிரந்தமே தோஷமிருந்தால் அபிஞ்ஞர்கள் போதிக்கலாமெனக்கூறுவதாலும் வேதாத்யயன ஸர்வஸ்வ கர்வஸ்வஹரணம் என்று ஓர் ஸம்ஸ்கிருதக் கிரந்தம் வெளியாகப்போகிறது. ஆனாலும் ஷை விஷயத்தை யாவருமறியுமாறு தமிழ் நடையில் இந்த முகவுரையை ஆரியதர்மப் பத்திரிகை மூலமாக வெளியிடலானோம்.

பஞ்சாபகேச கனபாடிகள்,
அம்பில்.

---

## ஸ்ரீ நடேசஸ்துதி.

कदुद्रश्रुतितात्पर्य परिज्ञानप्रचोदिता ।
प्रवर्तते मतिः स्तोत्रे शक्तिहीनापि मे प्रभो ॥ ॥१६॥

ஓ ப்ரபுவே, தைத்திரீய நாராயணோபநிஷத்திலுள்ள கத்ருக்ர ச்ருதி தாத்பர்ய பர்யாலோசனையால் ஏவப்பட்ட என்னுடைய புத்தியானது சாமர்த்தியமில்லாமல் இருந்தபோதிலும் உம்முடைய ஸ்தோத்திரத்தில் பிரவிருத்திக்கிறது. சுருதிதாத்பர்யமாவது "ஸ்துதிக்கத் தகுந்தவரும், சிறந்த ஞானமுள்ளவரும் சகலாபீஷ்டங்களைத் தருகிறவரும், ஹிருதயத்தில் வசிப்பவருமான ஈச்வரன் பொருட்டு ஸுகதகாமான ஸ்தோத்திரத்தைச் சொல்லுகிறோம்,, என்று. இதில் ஹிருதயத்தில் வசிப்பவர், என்கிற விசேஷணத்தால் சகலப் பிராணிகளுடைய சரீரங்களில் ஜீவரூபமாகப் பிரவேசித்துசர்வாந்தர்யாமியான பிர்மஸ்வரூபமென்கிற அத்வைத ச்ருதி தாத்பர்யமும் வெளியாகிறது. விராட்புருஷனுடைய ஹிருதயரூபமான புண்டரீகமென்றும் சிதம்பர ஸ்ரீசித்ஸபையில் திவ்ய நடனஞ்செய்யும் ஆனந்த நடேசஸ்வரூபமென்றும், கருத்து தோன்றுகிறது. சாந்தோக்கியஜாபாலாதி உபநிஷத்துக்களுடையவும், ஸூதசம்ஹிதை, சைவ ஏகாதச ருத்ரசம்ஹிதாதி புராணங்களுடையவும், தாத்பர்யமும் பிரகாசிக்கப்படுகிறது. இந்த சுருதியின் ஸாயண பாஷ்யத்தில் ஹிருதயத்தில் வஸிப்பதால் ஹிருதயரூபரென்று கூறப்பட்டிருக்கிறது. இதற்கு உபப்ராம்மணமாக ஸூதசம்ஹிதை ஒன்பதாவது அத்தியாயத்தில்

सभारूपाय ते नित्यं सभायाः पतये नमः ।
नमश्शिवाय सांबाय ब्रह्मणे सर्वसाक्षिणे ॥

விராட்புருஷனுடைய ஹிருதயரூபமானசிதம்பாசித்சபாரூபியாயும், சித்சபைக்கு நாயகனுயும் சர்வாந்தர்யாமியாயும் சிவகாமசுந்தரீ சமேதருமானநடேசர்பொருட்டுநமஸ்காரம்,என்று விசதமாயிருக்கின்றது.சிதம்பர நடேசதர்சனமே தஹராவித்யோபாசநமாகிறது என்றும்விஷயத்தைப் பின் விசதமாய் கூறுவோம். (16)

माध्यंदिनिर्व्याघ्रपदाभिरामो महर्षिवर्यो महयन्महेशम् ।
विलोक्यदिव्यं नटनं यदीयं कृतार्थतामाप तमेव वन्दे ॥ ॥१७॥

மத்தியந்தனமஹர்ஷியின் புத்ரரான வியாக்ரபாத மஹர்ஷியானவர் ஸ்ரீ மூலஸ்தான நாயகரைப்பூஜித்து எந்த சபாநடேசருடைய திவ்ய நடனத்தைத்தர்சித்து ஜன்மசாபல்யத்தை அடைந்தாரோ? அந்த திவ்ய நடேசரையே நமஸ்கரிக்கின்றேன் (17)

## வ்யாக்ரபாத சரித்திர சங்கிரஹம்

மத்யந்தின முனிவர் தம்முடைய குமாரருக்குச், சிவபுண்ணியங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது சிவலிங்காராதனம் என்றும் சிவஸ்தலங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்தது சிதம்பரம் என்றும், உபதேசித்தார். அதுகேட்டகுமாரர் பிதாவினுடைய அனுமதி பெற்றுக்கொண்டு தெற்குநோக்கிசென்று தில்லை வனத்தை அடைந்து அதனுள்ளே சிவகங்கையென்னுஞ் சிவதீர்த்தத்தையும் அதற்கு தெற்கே ஓராலமாநிழலிலே ஸ்ரீ மூலஸ்தானேச்வரர் என்னுஞ்சிவலிங்கத்தையும் தரிசித்து தினந்தோறும் அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து ஸ்ரீ மூலஸ்தானேச்வரரை பூஜைசெய்துகொண்டு வந்தார். சிலநாளாயபின்பு மேற்கே ஒரு திருக்குளத்தைக்கண்டு அதற்குமேற்கே ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து அதற்கு சமீபத்திலே ஓர் பர்ணசாலையில் இருந்துகொண்டு இருசிவலிங்கத்தையும் பூஜைசெய்துக்கொண்டிருந்தார். ஒருநாள் விடியுமுன் பனியிலே வழுக்காமல் மரங்களிலேறி புழு இல்லாத புஷ்பங்கள் எடுப்பதற்காக ஸ்ரீ மூலஸ்தான நாதருடைய அருளால் புலிக்கால் கைகளைப் போய் வலிமையுடைய கால்கைகளையும் அதில் கண்களையுமடைந்து அன்றுமுதல் வியாக்ரபாதரென்றும் பெயருடையவராகி வேத விதிப்படி சிவபூஜைசெய்துகொண்டு எண்ணில்காலமிருந்தார். அப்பொழுது பிதாவாகிய மத்யந்தன முனிவர்வந்து வியாக்ரபாத முனிவரைக்கண்டு மகிழ்ந்து உத்திரவு செய்தபடி வசிஷ்டமுனிவருடைய தங்கையாரை விவாகஞ்செய்து உபமன்யு என்னும் ஒரு சற்புத்திரரைப்பெற்றார். அப்புத்திரரை வசிஷ்டமஹரிஷியின்மனைவியாகிய அருந்ததிதேவி தம்முடைய ஆசிரமத்துக்குக்கொண்டு போய் காமதேனுவினது பாலையூட்டிவளர்க்கும் நாளிலே வியாக்ரபாதமுனிவர் தமது பர்ணசாலையிலே அப்புத்திரரைக்கொண்டு வந்துகிழங்கு பழு முதலியவற்றையும் கரைத்தமாவையுங்கொடுக்க அவைகளை உட்கொள்ளாது காமதேனுவின் பாலைவிரும்பி அழுகிற அப்புத்திரரை ஸ்ரீ மூலஸ்தானேசுரர் சந்நிதியிலே வளர்த்திவிட அவர் பசி மிகுதியால் அழுதுபரமேசுவரருடையகிருபையால் திருப்பாற்கடலைப்பெற்றுப் பருகிவளர்ந்தார். உபமந்யு முனிவர் இந்த க்ஷீரபான விசேஷத்தால்தான் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு சிவபரமயத்தை உபதேசித்தார். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அர்ஜுனனுக்கு கீதை மூலமாக இவ்வுபதேச சாரத்தையே உபதேசித்தருளினர்.

ஒருநாள் வியாக்ரபாத முனிவர் யோக மஹிமையால் தேவதாரு வனத்தில் நாற்பத்தெண்ணுயிர முனிவர்களுக்கு ஸ்ரீ நடேசபெருமான் திருநிருத்தஞ்செய்தருள் செய்ததை அறிந்து அதனை தரிசிப்பித்தருளும்படி ஸ்ரீ மூலஸ்தானேச்வரரை உபாஸித்து அம்மூர்த்தியின் கிருபையால் தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடிய சித்த யோக தினத்து மத்தியானத்திலே பதஞ்சலி முனிவரோடும் திரு ஸஹஸ்ர முனிவர்களோடும் பிரமன் முதலான தேவர்ஷி கணங்களோடும் திவ்ய நிருத்த தெர்சனஞ்செய்து ஜன்ம சாபல்யமடைந்தார். (இச்சரித்திரத்தின் விரிவை சிதம்பரம் மஹாத்மியத்தில் காண்க)

पतंजलिर्नृत्तदिदृक्षुरीशं अभ्यर्च्य दिव्यं नटनं च वीक्ष्य ।
यदीयढक्कोदितसूत्रभाष्यं चकार विद्याधिपमाश्रये तम् ॥ ॥१८॥

ந்ருத்ததர்சனஞ்செய்ய ஆசையுள்ள பதஞ்சலி முனிவர் ஸ்ரீமூலநாதரைப்பூசித்து திவ்யநடனத்தை தர்சித்து யாதொரு நடேசருடைய டமருகத்திலிருந்து ஒலிவடிவமாயுண்டான வ்யாகரண சூத்திரங்களுக்கு பாஷ்ஞ்செய்தாரோ! வித்யாதிபரான அந்த சிற்சபேசரை வணங்குகிறேன்.

### பதஞ்சலி சரித்திரஸங்கிரகம்.

ஒருநாள் ஸ்ரீநாராயணர் ஆதிசேஷ சயனத்தின்மீது செய்யும் நித்திரையைவிட்டெழுந்து சிவானந்தபரவசராய் இருக்கும் சமயம் ஆதிசேஷர் பாரந்தாங்காமல் திகைத்து அவரை வணங்கி ஓ! நாதனே!! தாங்கள் அடியேன்மீது முன்போல் சயனித்து விழியாது இப்படி எழுந்தருளியிருந்தமை என்னே என்று வினவ, விஷ்ணு சொல்வாராயினர். ஆதிசேஷா? நேற்றுச்சிவபெருமான் தாம் பிக்ஷாடன வடிவங்கொண்டு என்னை மோகினி வடிவங் கொள்வித்து என்னோடு தேவதாருவனத்துக்குச்சென்று பிக்ஷை எற்பாராயினர். அங்குள்ள முனிவர்கள் என்னைக்கண்டு மோகிக்க அவர்களுடைய பத்நிகள் பிக்ஷாடனரைக்கண்டு மோகித்தார்கள். அதை அறிந்த முனிவர்கள் கோபங்கொண்டு அபிசாரஹோமஞ் செய்தார்கள். சிவபெருமான் அக்குண்டத்தக்கியினின்றும் தோன்றிவந்தபுலியைப்பிடித்துத் தோலை யுடுத்துக்கொண்டார். பின்புவந்த பூதங்களை அடிமைகளாக்கிக்கொண்டார். பின்பு வந்த சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்துகொண்டார் பின்பு.

வந்த முயல்களை முதுகு நெரியும்படி வலப்பாதத்தினுலே மிதித்துக்கொண்டார். பின்புவந்த அக்நியைத் திருக்காத்திலேந்திக்கொண்டார். பின்புவந்த மந்திரங்களைத் திருவடியிலே திருச்சிலம்புகளாகச் சாத்திக்கொண்டார். பின்பு அம்முனிவர்களை அனுக்ரகிக்க சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தருளினர். அந்த நிருத்தானந்தத்தினுலே நித்திரையையொழித்தேன் என்றார். இவ்வார்த்தையை ஆதிசேஷர்கேட்டு நிருத்த தெர்சனத்தில் பேராசையுடையவராய் அனுமதி பெற்றுக்கொண்டு திருக்கைலாச மலையை அடைந்து பலகாலம் தவஞ்செய்தார். பரமேச்வரர் பிரத்யக்ஷமாகி, அன்பனே! சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அநுக்ரஹம் ஆகிய பஞ்சகிருத்யமே நமக்கு நிருத்தமாகும். நான் தேவதாருவனத்திலே நிருத்த பிரஸ்தாவனுமாத்ரஞ்செய்தபொழுது அவ்வனம் அதனைப்பொறுக்கமாட்டாதசைந்தது. நமது நிருத்தத்தைப் பொறுக்கவல்லது தில்லைவனம். அந்த ஸ்தலத்திலே மூலலிங்கம் இருக்கின்றது. அதற்குத்தெற்கே ஒரு சபையுண்டு. அங்கே நாம் எக்காலமும் நிருத்தஞ்செய்தருள்வோம். புண்யவான்களான திரு ஸஹஸ்ரமுனிவர்கள் வேதங்களால் ஸ்துதிக்கத்தகுந்த அச்சபையையும் நிருத்தத்தையும் தர்சிக்கிறார்கள், புண்யபாகமில்லாதவர்களுக்குத் தோன்றாது. நீ அங்கே இவ்வடிவத்தோடு போவாயாயின் உலகம் பயப்படும், நெடுங்காலத்துக்கு முன் அத்ரி முனிவனும் அவன் பத்நியாகிய அனசூயையும் உன்னைப் பிள்ளையாகப்பெறவிரும்பி தவஞ்செய்தார்கள். அவ்வனசூயை ஸ்நானம்செய்து கரையேறியபொழுது நீ அவளுடைய அஞ்சலியிலே ஐந்து தலைபொருந்திய ஒரு சிறுபாம்பாய் பொருந்த அவள் பயத்தினுலே கைவிட நீ விழுந்து பதஞ்சலி என்னும் பெயர்பெற்றாய். இப்பொழுது நீ அவ்வடிவமும் அப்பெயருங்கொண்டு நாகலோகத்துக்குப் போ. அங்கே ஒரு பர்வதமும் ஒரு பிலத்துவாரமுமுள்ளன. அப்பிலத்துவாரத்தின் முடிவு தில்லைவனம். ஓாலமா நிழலிலே அப்பருவதத்தின் கொழுந்து மூலலிங்கமாயிருக்கும். வியாக்ரபாதமுனிவன் நமது நிருத்தத்தைத் தரிசிக்கவிரும்பி அந்த லிங்கத்தை பூஜைசெய்துகொண்டிருக்கின்றான். நீயும்போய் அவனோடிரு. தைப்பூசம் குருவாரத்தோடுஞ் சித்தயோகதினத்து மத்யானத்திலே ஆனந்த நிருத்தங்காட்டியருள்வோம். அதை நீ தரிசித்து சப்த சாஸ்திரத்துக்கு

பாஷ்யஞ்செய்—என்றருள்செய்தார். அப்படியே பதஞ்சலி முனிவர் தில்லைவனம்வந்து ஸ்ரீவியாக்ரபாதமுனிவரோடு ஸ்ரீமூலஸ்தான நாதரை பூஜை செய்து கொண்டும் தில்லை வனத்தின் மேல் புறத்தில் ஒரு திருக்குளத்தைக் கண்டு அதன் கீழ்கரையிலே ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து பூஜைசெய்துகொண்டும் திருக்குளத்தின் வடபாகத்திலே பர்ணசாலைசெய்து அதிலிருந்தார். பின் சிவபெருமானால் குறிக்கப்பட்ட தைப்பூசதினத்தில் ஸ்ரீ சிற்சபேசருடைய ஆனந்த நிருத்த தர்சனஞ்செய்து இந்த ஞானசபையிலே இன்று முதல் எக்காலமும் சகல ப்ராணிகளுக்கும் ஆனந்த நிருததத்தை காண்பித்தருளும் என்று பிரார்த்திக்க, சிவபெருமானும் அங்கீகரித்தருளினர். பின் வியாகரண மஹாபாஷ்யத்தையும் சிற்சபேசருடைய உத்ஸவ நித்ய நைமித்திக பூஜாவிதி ஸூத்ரங்களையும் யோகஸூத்ரங்களையும் வைத்யசாஸ்திர வார்த்திகங்களையும்செய்து அநேக மஹர்ஷிகளுக்கு அத்யாபனம் செய்துகொண்டும் ஆனந்த நிர்த்தனஞ்செய்துகொண்டும் பரமானந்த பரிதராயிருந்தார். இச்சரித்திரத்திரத்தின் விரிவை சிதம்பர மகாத்மியத்திலும் ராமபத்ர தீக்ஷிதகிருத பதஞ்சலி காவ்யத்திலும் காண்க. (18)

पार्श्वद्वये कुसुमबिल्वदलै र्यदीयं मञ्जीरशिञ्जितमनोहरमंघ्रिपद्मम् ।
श्रौताध्वनैव विधिवन्मखिनोमहान्तः संपूजयन्ति तमहं शरणं प्रपद्ये॥१९॥

எந்தசிற்சபேசருடைய திவ்ய சரணகமலத்தை இரண்டுபக்கங்களிலும் பண்டிதோத்தமர்களான தீக்ஷிதர்கள் வேதவிதிப்படியே மல்லிகாதி புஷ்பங்களாலும் பில்வதளங்களாலும் பூஜிக்கின்றார்களோ அந்த திவ்யநடேசரை நமஸ்கரிக்கின்றேன். (19)

प्राप्तस्त्वत्कृपया जनिं जनिमतां वैयाघ्रपुर्यां प्रभो
नाथ त्वत्कृपयैव तावकपदद्वन्द्वार्चनार्होऽभवम् ।
नाथ त्वत्कृपया त्वदंघ्रिकमले भक्तिः शिवा मे भवत्
नाथ त्वत्कृपया त्वदीयविनुतिं कर्तुं मतिश्चाजनि ॥ ॥२०॥

ப்ரபோ! ப்ராணிகளுக்குள் நான் உம்முடைய கிருபையால் வியாக்ரபுரத்தில் ஜநித்து உம்முடைய கிருபையினாலேயே உம்முடைய சரணகமலங்களை பூஜிப்பதற்கு யோக்யனாகவுமானேன். ஓ!நாத!! உம்முடைய கிருபையால் உம்முடைய சரணகமலத்தில்

மங்கள காரியான பக்தியும் எனக்குண்டாயிற்று. ஓ! நாத!! உம்முடைய கிருபையால் உம்மை ஸ்தோத்ரஞ்செய்ய புத்தியும் உண்டாயிற்று. (20)

(தொடரும்.)

சிதம்பரம் ராஜா சோமசேகரதீக்ஷிதர்'

---

# ஓர் வேண்டுகோள்.

---

ஆர்யதர்மஙிலே குன்றிவரும், தற்காலத்தில் நம் ஆசார்யாள் அனுக்கிரஹத்தால் "ஆர்யதர்ம பத்திரிகை,, மூலமாய் அனேக விதமான நன்மைகள் உண்டாகின்றன. என்பதை யாவரும் அறிவார்கள். அப்படியிருக்க, ஆஷாடயில் உபாகர்மஞ்செய்வதா, சிராவணீயில் உபாகர்மஞ்செய்வதா, என்ற ஆசங்கை வருங் காலத்தில் ஆஷாடயில் செய்வதுதான் ஸித்தாந்தம் என்றதானது காலத்திற்கனுகுணமாகவும் ஸரியான காலத்தில் பத்திரிகை மூலமாகத் தெரிவித்தபடி ஹைதராபாத் ஸகிந்தாபாத் முதலான விடங்களில் ஆஷாடயிலேயே உபாகர்மம் நடந்தேறியது. அது போல் காயத்திரீஜபத்தில் சந்தேகம் வந்தகாலத்தில் 2. நாள் முந்தியோ அல்லது முதல்வாரத்திலேயோ தெரிவித்திருந்தால் தூரதேசத்திலுள்ளவர்களுக்கும் ஸௌகர்யமாயிருக்கும். ஆக்ஷேபஸமாதானம் செய்பவர்களை நான் தயவுசெய்து கேட்டுக் கொள்வதென்னவென்றுல் கர்மாக்கள் சரியான காலத்தில் நடக்கும்விதமாய் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதற்கு சமாதானம் Hinduவில் தெரிவித்ததாகச் சொல்லலாம், ஆனுல் அதுவும் இவ்விடங்களில் வெள்ளிக்கிழமைகாலே 8. மணிக்குத்தான் தெரியவந்தது. ஏதோ ஹிந்துபேப்பர் வரவழைக்கும் இரண்டொருவரே வெள்ளிக்கிழமையில் செய்தார்கள். பாக்கி யாவத்தாளும் ச்ரௌதிகள் பஞ்சாங்கப்ரகாரம் சனிக்கிழமை தான் செய்தார்கள். இந்தவாரப் பத்திரிகையானது எனக்குப் பிரதிசனிக்கிழமை மாலை வந்துசேரும் 11உ பத்திரிகை 12உ, அதாவது வெள்ளிக்கிழமைமாலை வந்துசேர்ந்தது. இக்காலத்தில் இந்தமாதிரியான பத்திரிகைகளை அவலம்பிக்கிறவர்கள் ரொம்

பவும் குறைவாகக் காணப்படுகிறார்கள். ஏதாவது நாவல் பத்திரிகை ஹாஸ்யங்கள், துணுக்குகள், விகடப்பேச்சுகள், நீசபாஷைகள், முதலான பத்திரிகைகளுக்கு சந்தா ஜாஸ்தியாய் இருந்தாலும் அதையேதான் ஆதரிக்கிறார்கள். குறைந்தசந்தாவான நம் ஆர்யதர்ம பத்திரிகையும் இதனிடையே உலாவுகின்றன. தவிர ஒருஸமயத்தில் நான் பஞ்சகவ்ய விஷயமாய் ஆஸ்திகர்களிடமிருந்து உண்மையைத் தெரிந்துகொள்ளும் அவாவினால் கேட்டிருந்தேன். அதுவிஷயம் 'நிர்ணயஸிந்து, முதலான கிரந்தங்களைப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், பஞ்சகவ்ய விஷயத்தை பத்திரிகையில் எழுதுவது அஸம்பாவிதம் என்றும் தெரியப்படுத்தியிருந்தது. இக்காலத்தில், உண்மைசப்தார்த்தம் தெரிந்தவர்கள் ரொம்பக்குறைவாகக் காணப்படுகிறார்கள். சில கிரந்தங்கள் அகப்படுவதும் கஷ்டமாயிருக்கிறது. ஆனதால் ஆஸ்திகர்கள் யாவரும் ஆக்ஷேபஸமாதானங்களைக் கர்மாக்களுக்கு லோபம்வாராமல் உண்மையை ஸரியானகாலத்தில் வெளியிடும்படிக்கும், ஸந்தேகங்களை வசன ரூபமாய் நிவர்த்தித்து, எழுதும்படிக்கும், கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு

V. S. வெங்கட்டராமசாஸ்திரி.

---

## வாரவிருத்தாந்தம்.

தனக்கென்றால் ஒன்று? சித்தூரில் குடிப்பவரை ஜாதியை விட்டுத் தள்ளுவது என்று சிலர் ஆரம்பிக்க, அதை மேஜிஸ்ட்ரேட் தடுத்தாராம். இதைப் பலமாக தேசிய பத்திரிகைகள் கண்டிக்கின்றன. வர்ணாச்ரம தர்மத்தைவிட்டு அன்யஜாதியில் மணந்தோரை விலக்கினால் இப்பத்திரிகைளுக்கு அஸாத்யகோபம் வந்து விடுகிறது. பொது மனிதர் அல்லது பொதுவான பத்திரிகைகள் தனக்கொன்று பிறருக்கொன்று என்று பேசாமல் ஸத்யத்தை தர்மத்தை எடுத்துரைக்கவேண்டும்.

காலத்திற்கேற்ற கோலம்:—காலமோ கலி. அதர்மமோ வேரூன்றி வானம்வரை ஓங்கிவளர்கிறது. அதற்கு எருவூட்டுவது தேசிய பத்திரிகைகள். ஆயிரக்கணக்கான ஆஸ்திகர்கூடி தர்மத்தைப்பேசி தீர்மானித்து எழுதினாலுங்கூட அவை ப்ரசுரிக்க மிகக்

கஷ்டப்படுகின்றன. தர்மவிருத்தமாக எவரேனும் ஒரு சிலர் அதிலும் பெண்கள் 4பேர்கூடி வம்புபேசினாலும் பத்திபத்தியாக எழுதிவிடுகின்றனர். நாகரீகச் சேற்றைப்பூசிய இரண்டொரு பெண்கள் எழுதிவிட்டால் அதைத் தக்கவிடத்தில் கொட்டை எழுத்தில் ப்ரபலமாக ப்ரசுரிக்கத்தவருவதில்லை. ஆஸ்திகப் பத்திரிகை ஒன்றை நடத்த மகாபிமானிகள் முன்வரவேண்டும். ஆர்ய தர்மத்தையாவது ஆதரியுங்கள்.

பாலுக்குப் பூனைகாவல்:—டக்கா என்றவிடத்தில் கோகுலாஷ்டமீ உத்ஸவத்தை முன்னிட்டு பலஹிந்துக்கள் ஊர்வலம்வர அது குழப்பத்தால் கலைந்ததாம். காரணம் என்னவென்றுகேட்ட பொழுது மஹம்மதியர் பிரார்த்தனைகாலமென ஸார்ஜண்ட் சொன்னாராம். அந்தந்த மதத்தினருக்கும் உசிதமான மதகார்யத்தைச் செய்ய பூர்ணஸ்வதந்திரமுண்டு. அதை எவரேனும் அபகரிக்காமல் காக்கவே போலீஸ் ஏற்பட்டது. இருவரையும் அழைத்து உசிதமாக ஏற்பாடுசெய்யாமல் குழப்பத்தை உண்டுபண்ணலாமா?

ஸத்ஸபைகள்:—6௳ திருவாதி ஸாஸ்வதி வாசகசாலையின் 4-வது ஆண்டுவிழாவிலும், 7௳ மதுரை சித்விலாஸினீஸபையின் ஸ்ரீ சங்கரவிஜய உபந்யாஸபூர்த்தியிலும், 7௳ சிதம்பரம் பிராமண ஸபையிலும் விசேஷ மஹோபன்யாஸங்கள் நடைபெற்றன. சிதம்பரத்தில் சாரதாசட்டத்தைக் கண்டித்து தீர்மானம் செய்யப்பட்டது. ஹைதராபாத்திலும் ஓர் ஸபைகூடி சாரதா சட்டத்தைக் கண்டித்தது.

எதுவேண்டும்:—ஈரோட்டில் நவஜவான், பாரதஸபை, மாதர் ஸபைகள் நடந்தன. வழக்கப்படி வைதிகநிந்தை அதர்மஸ்துதிகள் பூர்ணமாய் நடந்தன. ஆனால் பண்டையகாலத்து பாதிவ்ரத்யத்தை வாயாரப் புகழ்ந்து அதைக்கோருகின்றனர். விதவா விவாஹம் விவாஹப்பிரிவு உத்யோகம் ஸ்திரீ சுதந்திரம் முதலியவைகளையும் மிகமிகப் புகழ்ந்து இதற்காக எல்லாவற்றையும் தியாகம்செய்யவேண்டுமெனச் சொல்லுகின்றனர். எதை த்யாகம் செய்யப்போகின்றனர்? தர்மத்தைத்தான் தியாகம் செய்கின்றனர். பெருமைபேசிக்கொள்ள பண்டைய ஆசாரம் வேண்டும். அல்பசுகம்பெற துராசாரமும் வேண்டும். இதில் எதைத்தான் ஏற்பர்? பதில் தெரிந்ததே.

வீண்செலவு வேண்டாம்:—பிராமணர்கள் பொதுவாக எக்காலத்தும் பௌதிகதனமில்லாதவரே. கொஞ்சம் கையில் தனம் சேர்ந்தால் யாகம்செய்து இகபரசுகமான ஸத்விநியோகம் செய்வர். தற்சமயமும் அதிக தனிகர் இந்த ஜாதியிலில்லை, கொஞ்சம் தனம்பெற்றவர் ஸத்விநியோகத்திற்கு பதிலாக தர்மத்திற்கு காலணுகூட செலவுசெய்ய மனமில்லாமல் ஆயிரக்கணக்காக "எலக்ஷனு"க்கு செலவு செய்கின்றனர். இந்தியரின் சாரசரி வருமானம் 0—1—7. இதில் அக்ரமச்செலவுசெய்வது ஒழுங்கா? த்ரவ்யத்தை வீண்செலவு செய்யாமல் ஸுலபமாகக் கிடைப்பதாயிருந்து பரோபகாரமும்செய்ய முடியுமானல் இதில் ப்ரவிருத்திக்கலாம். இல்லையேல் வீண்செலவையாவது நிறுத்துதல் அவசியம்.

விவேகி வாழ்க! ஹைதராபாத்தில் மஹாராஜா, தன் சட்டசபையில் ஓர் அங்கத்தினர் சாரதாசட்டத்தை அவ்வூரிலும் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென ஓர் தீர்மானங்கொண்டுவர பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அச்சட்டத்தினுல் உண்டாகும் நன்மை தீமைகளைக் காணும்வரை இதை ஒத்திவைத்தார். இதற்கு இவரை வாழ்த்தல்வேண்டும்.

இன்னும் விதிக்கலாம்:—காலத்தைக் குறிப்பிடாமல் சாரதாசட்டத் திருத்தத்தை ஒத்திவைத்திருக்கின்றனர். இன்னுமும் விழித்தெழுந்து கண்டனம்செய்ய அவகாசமிருக்கிறது. எழுங்கள்! எழுங்கள்!!

நாமகரணம்:—இது மனிதர்களுக்கு புண்யபாபாதிகளை அநுபவிக்க தேவரும் மனிதரும் அறியும்படி வர்ணத்திற்கேற்ற சர்மா- வர்மா- குப்த—தாஸ் என்முறையே உபபதங்களுடன் சேர்ந்த ஓர் ஸம்ஸ்காரம் தற்கால நாகரீகத்தில் வீடு-ஸபை-கம்பெனி- நாய்க்குட்டி முதலியவைகளுக்கு தடபுடலாகப் பெரிய பெயரிடப்படுகிறது. உலகவ்யவஹாரத்திற்காக இதில் சிலரை ஏற்கலாம். பெயரைச் சொல்லும்வரையிலாவது பகவன்நாமாவைச் சொல்லட்டும் என பெரியோர் கிருஷ்ணஸ்வாமி ராமசந்திரன் பக்தவத்ஸலன் சங்கரன் எனப் பெயர்வைப்பது வழக்கம். நாகை ஸ்ரீவிநாயககான சபையார் எக்காரணங்கொண்டோ இந்த பெயரைவிட்டு தற்கால தேசியத் தலைவர் பெயரைவைக்க ஊரைக்

கூட்டினர். ஏன் பகவன் நாமம் அவருக்குப்பிடிக்கவில்லை? ஆஸ்திக்யக்குறைவேயன்றோ?

ஆசாரத்தைவிட்டதால் தீங்கு!! நமது ஸதாசாரம் பரலோகத்திற்குமாத்திரமேயன்றி இவ்வுலகிலும் பல பயனைத் தரத்தக்கதென்பதை இன்றும் உலகம் அறியவில்லை. தாம்பிரபாத்ரத்தில் வைத்த தீர்த்தம் ரோகத்தை அகற்றும் ஔஷதம்ஆம். வலது கையால், உட்கார்ந்து சொந்தபாத்ரத்தில் தீர்த்தமருந்துவது ஆசாரம். கண்ணாடி பீங்கான்களில் கண்டவர் எதிரில் நின்றுகொண்டே இடதுகையால் எச்சில்செய்து சாப்பிடுவது துராசாரம். மதுரையில் இப்படி சாப்பிடும் வழக்கமுள்ள பிராமணன் தீர்த்தமெனக்கருதி போடோபடம் அலம்பும் திராவகத்தைக் குடித்து மாண்டான். ஆசார: பரமோதர்ம:, ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:!

இக்கலி குரு யார்? கோலாப்பூர் ராஜாவின் குருவாம் ஓர் கலி குரு தீண்டாதார்என்பதே வேதசாஸ்திரத்தில் கிடையாது என்று கூறி பொதுவான கோவிலில் தீண்டாதார்களையும்விட உத்தரவு பண்ணுராம். காலத்திற்கேற்ற பல குருதோன்றுவது ஸகஜமே. வேதசாஸ்திரங்களைத் திருத்தக்கூறுவதுதான் விந்தை. பரமாசார்யாளே காசியில் பரீக்ஷார்த்தம்பரையனுகவந்த பரமசிவனை 'விலகு' எனக்கூறியதாகக் கதைகள் கூறுகின்றன. இக்கலி குருவுக்கு வேதசாஸ்திரம் எங்கிருந்து தனியாகக்கிட்டியதோ அறியோம். இதுபோன்றவர் வார்த்தையை ஆஸ்திகர் நம்பவேண்டாம். என்பதே நம் கோரிக்கை.

கண்டனக்கூட்டம். சேங்காலிபுரம் ஆகஸ்ட் 28ௗ, திருக்கோடிகாவல் 30. கோட்டையூர் 30ௗ, திண்டுக்கல் 3–9–31 ஸநாதநதர்மிகள் ஷை ஊர்களில் ஸபைகூடி சாரதாசட்டத்தைக் கண்டித்துத் தீர்மானம் அனுப்பியிருக்கின்றனர். மற்ற ஊராரும் இங்ஙனம்செய்துவந்தால் ஏதாவது கொஞ்சம்பயனுண்டாகலாம். உடனே கவனிக்க. அவகாசம் இன்னமுமிருக்கிறது.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா.